வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி-20.7.2026 நேரம் மாலை 6.10 மணி

----------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று மால்டோவா தலைநகரில் அந்நாட்டு அதிபரை சந்தித்துப் பேசினார்.

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று நாடாளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன

நாட்டில் கடந்த ஆண்டு பள்ளி அளவிலான மாணவர் சேர்க்கை, சுமார் 25 கோடியாக அதிகரித்துள்ளது.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று துணை நிலை ஆளுநரை நேரில் சந்தித்து, அமைச்சர்களுக்கான இலாக்கா ஒதுக்கீட்டுப் பட்டியலை வழங்கினார்.

முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று மால்டோவா தலைநகர் சிஸினாவ்-வில் அந்நாட்டு அதிபர் திருமதி மய்யா ஸாந்து-வை சந்தித்துப் பேசினார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்........

(வாய்ஸ்)

இந்தியா-மால்டோவா உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் பரஸ்பர அக்கறை உள்ள வேறுபல துறைகளுக்கு உறவுகளை விஸ்தரிப்பது குறித்தும், பிரதிநிதிகள் நிலையிலும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் கல்விக் கட்டமைப்பை மேம்படுத்த, இந்தியா-மால்டோவா உறவுகளில் முக்கியத்

துவம் அளிக்கப்பட்டுள்ளதாக, பேச்சு வார்த்தைக்கு பின்னர் இருதலைவர்களும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், தெரிவிக்கப்பட்டது. இந்தியாவின் சர்வதேச சோலார் கூட்டணியில் மால்டோவா ஏற்கனவே இடம் பெற்று இருப்பதை குடியரசு தலைவர் சுட்டிக்காட்டி, இதேபோல சர்வதேச உயிரி எரிபொருள் கூட்டணி உள்ளிட்ட அமைப்புகளிலும் மால்டோவா இணைய வேண்டும் என அழைப்பு விடுத்தார். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று சிஸினாவ் நகரில் புகழ்பெற்ற மால்டோவிய மன்னர் மகா ஸ்டீபன் நினைவகத்தில் மலர் அஞ்சலி செலுத்துகிறார். இந்திய குடியரசு தலைவர் ஒருவர் மால்டோவா செல்வது இதுவே முதல் முறை என்பதும், வரலாற்று சிறப்பு வாய்ந்த இப்பயணம், இருநாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கை மற்றும் நட்புணர்வை பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

நாடாளுமன்றம்

நீட் வினாத்தாள் முன்கூட்டியே வெளியான விவகாரம் உட்பட பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் அமளி ஏற்படுத்தியதால், இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. மாநிலங்களவை முதலில் 5 முறையும், பிற்பகல் 2.30 மணிக்கு மேல், நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டது. மக்களவையிலும் அடுத்தடுத்த ஒத்தி வைப்புகளைத் தொடர்ந்து, பிற்பகல் 3 மணிக்கு மேல், அலுவல்கள் நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டன. முன்னதாக இன்று முற்பகல் மக்களவையில், மறைந்த முன்னாள் உறுப்பினர்கள், மற்றும், கத்தார் நாட்டின் முன்னாள் அமீர் ஷேக் ஹமத் பின் அல் தானி மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மாநிலங்களவையில் டாக்டர் முகேஷ்பாய் ரத்வா திருமதி சுஷ்மிதா தேவ் திரு பவன் கேரா, திரு ஜேம்ஸ் சங்மா உள்ளிட்டோர் புதிய உறுப்பினர்களாக பதவி ஏற்றுக் கொண்டனர்.

டெல்லி-போலீஸ்

டெல்லி ஜன்தர் மந்தர் பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது, பலப் பிரயோகம் அல்லது கைது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று டெல்லி போலீஸ் தெரிவித்துள்ளது. நிலவரங்களை தொழில் முறை ரீதியில் காவல் துறையினர் கையாண்டு வருவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் டெல்லி போலீஸ் தெரிவித்துள்ளது.

நட்டா-சந்திப்பு

மத்திய அமைச்சர் திரு ஜேபி நட்டா இன்று புதுடெல்லியில் போராட்டக்காரர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தார். அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான உத்தேசம் போராட்டக்காரர்கள் தரப்பில் இருந்து பெறப்பட்டதாகவும் சுமுகமான சூழலில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது எழுத்து பூர்வ மனு ஒன்றை இவர்கள் கொடுத்திருப்பதாகவும் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அமைச்சர் தெரிவித்துள்ளார். போராட்டத்தை இவர்கள் முடித்துக் கொண்டு, இயல்பு நிலையை மீட்பதில் அரசுக்கு உதவ வேண்டும் என்றும் திரு ஜேபி நட்டா கேட்டுக் கொண்டுள்ளார்.

விமானம்- சந்திப்பு

மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு கிஞ்சராப்பு ராம்மோகன் நாயுடு, இன்று புதுடெல்லியில், ஐக்கிய அரபு அமீரகத்தின் சுற்றுலாத் துறை அமைச்சர் அப்துல்லா பின் அவுக் அல் மாரி-யை சந்தித்துப் பேசினார். வேகமாக வளர்ந்து வரும் இந்தியா விமானப் போக்குவரத்து துறையில், குறிப்பாக விமான இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளில், ஒத்துழைப்பிற்கான புதிய பாதைகளை திறந்து விடுவது குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் திரு நாயுடு தெரிவித்துள்ளார். இந்தியா-யுஏஇ இடையிலான இருதரப்பு கூட்டாண்மை உறவுகளில், வலுவான விமான போக்குவரத்து இணைப்புகளுக்கு, ஏற்கனவே முக்கிய இடம் இருப்பதை அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

*சுற்றுச்சூழல்*

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு பூபேந்தர்யாதவ் இன்று புதுடெல்லியில், பருவநிலை மாற்றம் பற்றிய ஐநா ஒப்பந்த கட்டமைப்பின் நிர்வாகச் செயலர் திரு சைமன் ஸ்டீலை சந்தித்துப் பேசினார். பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த தேவையான தொழில் நுட்பங்களின் பரிமாற்றம் நிதி ஆதரவு மற்றும் சம்பந்தப்பட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டதாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில், அமைச்சர் தெரிவித்துள்ளார். பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த, தேசிய அளவில் இந்தியா வழங்க வேண்டிய பங்களிப்புகளின் பட்டியலை, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இந்தியா ஏற்கனவே சமர்ப்பித்து, உரிய காலத்திற்கு முன்பாகவே இலக்குகளை எட்டி இருப்பதை அவர் சுட்டிக்காட்டி உள்ளார். பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த, சம்பந்தப்பட்ட வேறுபல துறைகளிலும் முக்கிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

*நீதிமன்றம்-அயோத்தி*

அயோத்தி ராமர் கோவிலுக்கு பக்தர்கள் வழங்கிய காணிக்கையில் கையாடல் நடந்திருப்பதாக கூறப்படும் வழக்கில் , உத்தரபிரதேச அரசால் நியமிக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழு புலனாய்வின் நடப்பு நிலவரம் குறித்து உச்சநீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்து உள்ளது. சீலிட்ட உறையில் வைத்து, தலைமை நீதிபதி திரு சூர்யகாந்த் தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்விடம், இன்று இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

*பிரதான்*

நாட்டில் பள்ளி அளவிலான மாணவர் சேர்க்கை, கடந்த 2025-26-ஆம் ஆண்டில் சுமார் 25 கோடியாக அதிகரித்துள்ளது. பள்ளிக் கல்வி மற்றும் தொடர்புடைய இதர விவரங்களை, மாவட்ட அளவில் ஒருங்கிணைந்த முறையில் சேகரிப்பதற்கான யூடீஸ்-பிளஸ் டிஜிட்டல் கட்டமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள தரவுகளில் இவ்வாறு தெரிய வந்துள்ளது. மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் இன்று மக்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் இதைத் தெரிவித்தார்.

இதுகுறித்து கூடுதல் விவரங்கள்.......................

(வாய்ஸ்) பள்ளிக் கல்வியின் எல்லா நிலைகளிலும் ஆண்-பெண் சமத்துவ விகிதம், 1 அல்லது அதற்கு மேலாக பதிவாகி இருப்பதாகவும் கல்வியில் பெண்பால் பங்கேற்பு அதிகரித்து வருவதற்கு இதுவே சான்றாகும் என்றும் அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான கூறினார். பள்ளிகளில், சிறப்பு தேவை உள்ள குழந்தைகள் உட்பட அனைத்து குழந்தைகளுக்கான கழிவறை வசதிகளும், மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கு அப்பாற்பட்டு, கணிப்பொறி மற்றும் இன்டர்நெட் உள்ளிட்ட அதிநவீன வசதிகளும் அதிகரித்து இருப்பதாக அவர் தெரிவித்தார். 2020-ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையின் கீழ் முன்மாதிரி பள்ளிகளாக, பிஎம்-ஶ்ரீ பள்ளிகள் அமைக்கப்பட்டு வருவதாகவும், தற்போது நாடு முழுவதும் இத்தகைய 13 ஆயிரம் பள்ளிகள் செயல்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

*எத்தனால்*

பெட்ரோலுடன் கலக்கப்படும் எத்தனால் அளவை 20 சதவிகிதத்திற்கு அப்பால் உயர்த்த, எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என மத்திய பெட்ரோலியத் துறை இணை அமைச்சர் திரு சுரேஷ் கோபி இன்று மாநிலங்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில், அறிவியில்-தொழில் நுட்ப ஆய்வுகள், மற்றும், விரிவான ஆலோசனைகளுக்கு பின்னர், இதற்கான முடிவுகள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். 2013-14-ஆம் ஆண்டு முதல் தற்போது வரை, இதே முறையில் தான், எத்தனால் விகிதம் படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

*ரங்கசாமி-சந்திப்பு*

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று ஆளுநர் மாளிகையில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை சந்தித்து, அமைச்சர்களுக்கான இலாகா ஒதுக்கீட்டு பட்டியலை வழங்கினார். எந்த அமைச்சருக்கு எந்த இலாகா என்பது குறித்த விவரங்கள், துணை நிலை ஆளுநர் அறிவிக்கும் போது தெரிய வரும் என்று, பின்னர்

செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளிக்கையில், முதலமைச்சர் கூறினார்.

*காரைக்கால்*

காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், வரும் 31-ஆம் தேதிக்குள், உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து வர்த்தக உரிமம் பெற்றுக் கொள்ள வேண்டும் என கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் அறிவுறுத்தி உள்ளார். தவறும் பட்சத்தில், உரிய உரிமம் பெறாமல் வணிக நிறுவனங்களை நடத்துவோர் மீது, எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் மூலம் கடைகளுக்கு சீல் வைக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

*மாகே*

மாகேயில், மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் துறை சார்பில், பள்ளூர் ஸ்ரீ நாராயணா உயர்நிலைப் பள்ளியில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் போதை பொருட்களை தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்தும், அரசின் பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் குறித்தும் மாணவ-மாணவிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டது. பேட்டி பச்சாவோ-பேட்டி படாவோ இயக்கத்தின் கீழ் குடைகளும் வழங்கப்பட்டன.

*அஸாம்-மழை*

அசாம் மாநிலத்தின் கிழக்கு பகுதிகளில் கனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் இந்திய ராணுவம் பெரிய அளவிலான உதவி-மீட்புப் பணிகளை தொடக்கி உள்ளது. ஆபரேஷன் ஜல் ராஹத் என்னும் இந்த நடவடிக்கையில் மத்திய-மாநில பேரிடர் மீட்பு படையினர் இணைந்து ஈடுபட்டுள்ளனர். அசாமில், தீமாஜி, திப்ரூகார், டின்சுக்கியா, ஜோர்ஹாட் உள்ளிட்ட 8 மாவட்டங்களைச் சேர்ந்த 298 கிராமங்களில், 57 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வெள்ளத்தில் சிக்கியுள்ள நிலையில், கூடுதல் மீட்பு படகுகள் மற்றும் ராணுவ ஹெலிகாப்டர்களும் உதவி-மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பஞ்சாப் அரியானா மாநிலங்களிலும் மழையால் பல இடங்களில் நீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீரில் மழை

நிலவரம் குறித்து 6 மணி நேரத்திற்கு ஒருமுறை அறிக்கை சமர்ப்பிக்க முதலமைச்சர் திரு உமர்அப்துல்லா, மாவட்ட நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தி உள்ளார்.

*மழை-யாத்திரை*

உத்தராகண்ட் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் கனமழை குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் நிலச்சரிவு உள்ளிட்ட அபாயங்களைக் கருத்தில் கொண்டு, 4 முக்கிய புண்ணிய தலங்களுக்கான சார்தாம் யாத்திரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. யாத்திரை பாதையில் சாலை தடை ஏற்பட்டுள்ள இடங்களில், பயணிகளை அந்தந்த பகுதியிலேயே பத்திரமாக தங்க வைக்கவும், சாலைகளை சரி செய்த பின்னர், தொடர்ந்து யாத்திரையை அனுமதிக்கவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*வானிலை*

தமிழக கடலோரப் பகுதிகளில், பலவீனமான காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புதுச்சேரி-காரைக்கால் மற்றும் தமிழகத்தில் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், வரும் 26-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*ஒலிபரப்பு*

நாட்டின் கேபிள் டிவி மற்றும் DTH கட்டணங்களை, 4-முதல் 6 மடங்கு உயர்த்தவும், பல்வேறு தொலைக்காட்சி சேவைகளை மூடவும், புதிய வரைவு விதிமுறைகளை அரசு உருவாக்கி இருப்பதாக சமூக ஊடகத்தில் வெளியாகி வரும் தகவல் பொய்யானது என்று பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை அறியும் பிரிவு தெரிவித்துள்ளது. பொது மக்கள், மற்றும், பல்வேறு தரப்பினரின் கருத்துக்களைப் பெறுவதற்காக அண்மையில் அரசு வெளியிட்டுள்ள வரைவு விதிமுறைகளில், கட்டண உயர்வு குறித்து உத்தேசம் எதுவும் இடம் பெறவில்லை என்றும்,

ஏற்கனவே உள்ள விதிமுறைகளை ஒருங்கிணைத்து, வானொலி மற்றும் தொலைக்காட்சி துறையில் வர்த்தகம் புரிவதை எளிமையாக்குவதே வரைவு விதிமுறைகளின் நோக்கம் என்றும், பத்திரிக்கை தகவல் அலுவலகம் கூறி உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று மால்டோவா தலைநகரில் அந்நாட்டு அதிபரை சந்தித்துப் பேசினார்.

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று நாடாளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன

நாட்டில் கடந்த ஆண்டு பள்ளி அளவிலான மாணவர் சேர்க்கை, சுமார் 25 கோடியாக அதிகரித்துள்ளது.

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று துணை நிலை ஆளுநரை நேரில் சந்தித்து, அமைச்சர்களுக்கான இலாக்கா ஒதுக்கீட்டுப் பட்டியலை வழங்கினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------